மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 168. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

168—

கால்நடை மருத்துவமனை

***32491—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்து சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்கும் பணி 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் இம்மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை, 32 ஊராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவமனையாகும். அங்கே போதிய கட்டட வசதி இல்லை, சுற்றுச் சுவர் வசதி இல்லை என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தி மேம்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டும். அதோடு அங்கே இருக்கக்கூடிய மருத்துவர், அங்கே நிர்வாகப் பொறுப்பையும், கிராம ஊராட்சிகளில் உள்ள மருந்தகங்களுக்குச் செல்ல வேண்டிய காரணத்தால், மேலும் நிரந்தரமாக, கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் 220 கால்நடை மருத்துவர்கள் அரசு தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் நிரந்தரமாக மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று திருத்துறைப்பூண்டி அருகில் 10 கி.மீ. தூரத்தில் உள்ள எழிலூர் ஊராட்சி, நுணாகாடு ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றால், திருத்துறைப்பூண்டி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே எழிலூர் ஊராட்சியில் ஒரு கிராம கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊராட்சிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் புதிய மருத்துவ நிலையம் அமைக்க இந்த அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராஜேந்திரன்.

திரு. கு. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச் சுவர் எழுப்பப்படுமா? என்னுடைய மீன்சுருட்டி கால்நடை மருந்தகத்தில் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. அங்கு பாதுகாப்பற்ற நிலைமை உள்ளது. அதற்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கப்படுமா? அங்கு போதிய உயிர் காக்கும் மருந்து இல்லை. குறிப்பாக மூன்று மாதங்களுக்கு முன் என்னுடைய சுறவை மாட்டுக்கு சரியான உயிர் காக்கும் மருந்து இல்லை. எனவே, நானே கடையில் வாங்கிக் கொடுத்து அதற்குப் போட

வைத்திருக்கிறேன். அதனால் என்னுடைய தொகுதிக்குட்பட்ட மருந்தகங்களுக்கு உயிர் காக்கும் மருந்துகளும், அதேபோல் சுற்றுச் சுவரும் அமைத்துக் கொடுக்கப்படுமா என்று தங்கள்மூலமாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மீன் சுருட்டி பகுதியில் உள்ள அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டுமென்று கூறினார்கள். சுற்றுச் சுவர் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டிக்கொள்ளலாம். ஏனென்றால் சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அதுபோல உயிர் காக்கும் மருந்துகள் எல்லாம் தட்டுப்பாடாக இருக்கின்றன என்று கூறினார்கள். அதுபற்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தமிழகத்தில் மருந்து தட்டுப்பாடு இல்லை என்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. ஒருவேளை தாங்கள் குறிப்பிடும் அந்த மருந்து, துறைமூலமாக வழங்கப்படுகிறதா? என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் காட்டாத்துறையில் அமைந்திருக்கக்கூடிய உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைப்பதற்காக 3 சட்டமன்ற உறுப்பினர்கள நிதியிலிருந்து வாகனம் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அந்த வாகனம் சுமார் 3 மாத காலமாக உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநர் இல்லாத . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சுற்றுச் சுவர் கட்டுவது சம்பந்தமானது சார்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இது கால்நடை மருத்துவமனை பற்றியது சார். நடமாடும் மருத்துவமனை பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஓட்டுநர் இல்லாத காரணத்தினால் அந்த வாகனம் அங்கே நின்று கொண்டிருக்கிறது. ஓட்டுநரை நியமித்து அந்த வாகனத்தை இயக்க

2008 ஏப்ரல் 28]

அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடமாடும் கால்நடை மருந்தகம் அவசியமாகத் தேவை, மலைப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அது தேவை என்று கூறி அதற்காக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து வாகனமும் வாங்கப்பட்டுள்ளது. இந்தத் துறை மானியக் கோரிக்கையில் அதற்கான பதிலை அளிக்கலாமென்று இருந்தேன். மேற்படி நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். அதனால் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

169—

பயிற்சி

***35103—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாணவ, மாணவியருக்கு மத்திய மற்றும் மாநிலப் பணிகள் தேர்வுகளுக்கான பயிற்சியை தாட்கோ மூலம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* அனைத்து மாவட்டத் தலைநகரிலும், தாட்கோ மூலம் மத்திய மாநிலப் பணித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS